ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | ஜனவரி 2000 | கானம் : 6

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 5 ஜனவரி 2000 கானம் : 6

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸத்குரு பஞ்சரத்னமாலிகா | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 50 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 32 | 9 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 20 | 13 |
| 6. | திருப்பாவை | 19 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 26 | 27 |
| 8. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 53 | 28 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 31 |
| 11. | செய்திகள் | 32 |
| 12. | பண்டைய பாரதத்தின் பெருமை | அட்டைப் பக்கங்கள் |



சென்னை ப்ரேமிகபவனத்தில், வைகுண்ட ஏகாதஶியை முன்னிட்டு
பரமபதவாசல் திறக்கப்பட்டு கருடவாஹனத்தில் எழுந்தருளியிருக்கும்
மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன்.

# ஸ்ரீ ஸத்குரு பஞ்சரத்ன மாலிகா

ராகம் : நாட்டை

த்ரக்ஷ்யே ஸ்ரீ குருமூர்த்திமத்புதமஹம் ஸ்ரீ மாதுரீ ஸேவகம்
ஸ்ரீமத்ப்ரேமிக பாத பத்மபஜனாஸக்தம் தயாஸாகரம் ।
ஸ்ரீமத்பாகவதார்ணவே ப்ரவிலஸத்மாணிக்ய பாஸாங்கிதம்
ஸ்ரீ ராமாயணரத்நவாரிதிசலந் நீலாஷ்மனா ஶோபிதம் ॥

ராகம் : மோஹனம்

ஸேவே ஸ்ரீமுரளீதரம் குருவரம் ஸர்வாத்மனா ஸர்வதா
ஶாந்தம் ப்ரேமஸுதார்ணவம் ஸுமதுரம்
நித்யானுபாவோஜ்வலம் ।
ஸத்யானந்த குணாகரம் த்ரிஜகதாமாதாரபூதம் ஹிதம்
ப்ரீதிஸ்நிக்த நிரீக்ஷணம் பரிலஸந்மாதுர்ய ஸம்பாஷணம் ॥

ராகம் : ஹிந்தோளம்

ய: பாலேத்ருதபுண்ட்ரக: கரதலே ஸம்ஸக்தசிந்மாலிக:
ஸ்ரீ கண்டே த்ருதரத்னமாலிகாகண : ஶ்ருங்காரஸாராலக: ।
ஸ்ரீ கந்தேன விலிப்ததேஹஸுபக: ஸர்வார்த்த ஸௌக்யப்ரத:
ஸோண்யம் ஸ்ரீமுரளீதரோ விஜயதே மந்மானஸே மந்திரே ॥

ராகம் : ஸாவேரி

ஸ்ரீ க்ருஷ்ணம் ஹ்ருதிலாலயன் விதநுதே பக்த்யேகதானாத்மதாம்
ஸ்ரீ நாமாம்ருதவர்ஷணம் ப்ரகுருதே ஸர்வாதி வித்வம்ஸநம் ।
கோபீசந்தன மாலிகா: ஸுபஹுஶோ தத்தே ஹி புண்யாத்மிகா:
ஸோண்யம் மாம் குருராஜமூர்த்திரவதாத் தீனாவனே தீக்ஷித: ॥

ராகம் : ஷண்முகப்ரியா

ஸர்வான் வைதிக தாந்த்ரிகான் அஹரஹ: ஸம்பாவயன் ஜீவதாத்
ஸ்ரீமத் பாகவத புராணசதுரான் ஞானோத்தமான் பாவுகான் ।
பௌரான் பக்திபராயணான் ஸத்ருஷா ஸர்வாத்மகஸ்ஸுந்தர:
ஸ்ரீமான் வம்ஶ விதாரகோ ஹி ஶரதாம் ஹைமந்திகாணாம் ஶதம்
॥

ராகம் : குந்தவராளி

பஜே ஸுநீலமேக தேஹகாந்தி ஸௌபகம் முதா
விரக்தி பக்தி ஸம்விதம் ஸுபுண்ய நாம வைபவம் ।
ப்லவம் ஸதா பவாப்தி தாரணே க்ஷமம் ஸுபக்திதம்
ஸுபாவனே ஸுதாரகே ஸுஜன்மவாஸரோத்ஸவே ॥

ஒரு ஸமயம், ஒரு மீனவன் கடலில் மீன் பிடிக்கச் சென்றான். அப்பொழுது ஒரு மீன் அவன் வலையில் வந்து விழுந்தது. அதை அவன் தனது வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்து உண்பதற்காக அறுத்தான். அங்ஙனம் அறுத்தபொழுது, அதன் வயிற்றினுள் ஒரு விலை உயர்ந்த ரத்தினம் இருப்பதைக் கண்டான். அந்த மீனவனுக்கு அந்த ரத்தினத்தின் ஜாதியைப் பற்றியோ, அதன் விசேஷம் மற்றும் அதன் விலை பற்றியோ எந்தவித அறிவும் கிடையாது. ஆனாலும் அவனுக்கு இதைக் கொண்டு போய் பட்டிணத்தில் உள்ள ரத்தின வியாபாரி கடையில் கொடுத்தால் நிச்சயம் ஓரளவு பணம் கிடைக்கும் என்று தோன்றியது. அது போலவே, பட்டிணத்து வியாபாரியிடம் கொண்டு போய் கொடுத்தான்.

அந்த ரத்தின வியாபாரிக்கு வைரத்தைப் பார்த்தவுடன் அதன் ஜாதி, மதிப்பு எல்லாம் புரிந்துவிட்டது. மேலும் அந்த வியாபாரிக்கு, ''இந்த மீனவனுக்கு இந்த ரத்தினத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது'' என்றும் தெரிந்து விட்டது. அவன் தனது மனத்தினுள் ஒரு முடிவு செய்தான். ''நாம் இதை 1000 ரூபாய்க்கு இவனிடம் வாங்கி, லக்ஷம் ரூபாய்க்கு ராஜாவிடம் விற்றுவிடலாம்'' என்று முடிவு செய்து, அது போலவே செய்தான்.

வேடனுக்கு 1000 ரூபாய் வந்தது என்ற திருப்தி. அவன் போய் விட்டான். வியாபாரியோ, இப்பொழுது அந்நாட்டு ராஜாவிற்கு, ''தன்னிடம் மிக உயர்ந்த ரத்தினம் வந்து சேர்ந்திருப்பதாகவும், 1 லக்ஷம் ரூபாய் கொடுத்தால் மட்டுமே அதை தருவதாகவும், மேலும் அத்தகைய ரத்தினம் வேறு எங்கும் கிடைக்காது'' என்றும் தெரிவித்து செய்தி அனுப்பினான். ராஜா இந்த செய்தியை கேள்விப்பட்டவுடன் 1 லக்ஷம் ரூபாயை பண மூட்டையாகக் கட்டி அதை சேவகர்கள் மூலம் கொடுத்தனுப்பி ரத்தினத்தை வாங்கி வரச் சொன்னான். சேவகர்களும் வியாபாரியிடம் பணத்தைக் கொடுத்து, ரத்தினத்தை வாங்கிக்கொண்டு ராஜாவிடம் கொண்டு தந்தனர். அந்த அழகான விலை உயர்ந்த ரத்தினத்தை ராஜா தனது மகுடத்தில் சூட்டிக்கொண்டான். அதுவும் அவனுக்கு மேலும் அழகைத் தந்தது. ராஜா மேற்கொண்டு அதை யாருக்கும் கொடுக்கவும் இல்லை.

இந்த கதையில் வரும் மீனவன், லௌகீகமான பலன்களுக்கு

நாமகீர்த்தனத்தை ஆஶ்ரயித்து வருபவர்களைப் போன்றவன். இப்படிப்பட்டவர்களுக்கு நாமகீர்த்தனத்தின் மஹத்துவம் தெரியாது. இந்தக் கதையில் வரும் வியாபாரியோ, மோக்ஷத்திற்கோ அல்லது ஆத்மாவை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டோ, அதற்காக நாமகீர்த்தனத்தை ஆஶ்ரயித்து இருப்பவர்கள் போன்றவன். இவர்களுக்கு நாமகீர்த்தனத்தின் மஹத்துவம் தெரிந்திருந்தும் இதன் மூலம் வேறு ஒன்றை பெறவே விரும்புகின்றனர்.

இந்தக் கதையில் வரும் ராஜாவோ, ஒரு உத்தமஞானி அல்லது உயர்ந்த பக்தரைப் போல் எதையும் எதிர்பாராது நாமகீர்த்தனத்திற்காகவே நாமகீர்த்தனம் செய்பவர் போன்றவர். அவர்களுக்கு அதுவே ஆனந்தம். நாமகீர்த்தனம் கொண்டு வேறு ஒன்றைப் பெற அவர்கள் முயல்வதில்லை. அதுவே அவர்களுக்கு பலனாகவும் இருக்கிறது.

''இப்படி இருக்கையில் பகவந்நாமா சொல்லிவிட்டு, பணம் கேட்பவர்களைப் பற்றி என்ன சொல்வது'' என்று நமது ஸத்ஸங்கத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாஸம் செய்தார்கள். இவை ரஸமாக இருப்பதால் எழுதினேன்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# குரு க்ருபை

ஒரு தீபம் எரிவதற்கு திரி அவசியமாயிருக்கிறது. அது மட்டுமில்லை, விளக்கில் எண்ணெயும் இருந்தாகவேண்டும். விளக்கில் எண்ணெய் இல்லாவிடில் தீபமானது, திரியை முற்றிலும் எரித்துவிடும். தீபமும் அணைந்து விடும். விளக்கில் ஊற்றப்படும் எண்ணெய்தான் திரி எரிந்து போய்விடாமல் காக்கிறது. அதுவேதான் தீபம் சரியாக சுடர்விட்டு தொடர்ந்து எரியவும் காரணமாக இருக்கிறது. அதுபோல், ஒரு மனிதனுக்கு குருநாதரின் க்ருபை என்பது இல்லை என்றால், அவனை அவனது வினைப்பயன் (ப்ராரப்தம்) படாத பாடு படுத்தும். இது எண்ணெயில்லா விளக்கில் திரி உள்ளது போன்றது. குருநாதரின் க்ருபைதான் இங்கு விளக்கில் ஊற்றப்படும் எண்ணெய். குருநாதரின் க்ருபை ஒரு ஜீவனுக்கு இருக்கும் பக்ஷத்தில் ப்ராரப்தமானது அவனை நெருங்க பயப்படுகிறது. விளக்கில் எண்ணெய் இருந்தால், தீபம் சுடர்விட்டு எரிந்தாலும், திரி எரியாமல் காக்கப்படுவது போல், குரு க்ருபை உள்ள ஜீவன் வாழ்க்கையில் உள்ள ப்ராரப்தம் அவனை துன்புறுத்துவதில்லை.

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

கேள்வி : மஹாத்மாக்களின் சரித்ரங்களைப் பற்றிச் சொல்லும் பொழுது அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த மேன்மையான விஷயங்களை மட்டும் சொல்கின்றோமே. ஏன்? அவர்களுடைய ஸந்நிதானங்களிலும் பல சண்டை சச்சரவுகள் நடந்திருக்கலாம் அல்லவா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : மஹான்களைப் பற்றியும், பெரியவர்களைப் பற்றியும் சொல்லும்பொழுது அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த உன்னத விஷயங்களை மட்டுமே சொல்லவேண்டும் என்பது மரபு. மேலும், சண்டை சச்சரவுகள் உலகில் எங்கும் காணக் கிடைக்கின்றன. அதைப் பற்றிப் பேசி ப்ரயோஜனம் ஒன்றும் இல்லை. மஹான்களின் ஸந்நிதானங்களில் இது போன்ற விஷயங்களும், பல துக்கமான விஷயங்களும் நடந்து இருந்தாலும் அது போன்ற ஸமயங்களில் அவர்கள் எவ்வாறு இருந்தார்கள் என்பதே பார்க்கவேண்டிய விஷயமாகும்.

கேள்வி : நீங்கள் எப்பொழும் ஜபம் செய்து வருகின்றீர்கள். நல்ல காரியங்களையே செய்து வருகிறீர்கள். உங்களுக்கும் கஷ்டம் வருகின்றதே! நீங்கள் செல்லும் வண்டியில் விபத்து உண்டாகி விடுகின்றது! பொருட்கள் திருட்டு போகின்றன! உங்களுக்கும் பல ஸங்கடங்களை விளைவிக்க சிலர் முயல்கின்றார்களே! இது ஏன்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : மீரா போன்றவர்கள் அத்தகைய பக்தி செய்தும், பகவானுடன் பேசி, விளையாடியும் இருந்தபோதிலும், மீரா அனுபவித்த துன்பத்தை உலகில் யார்தான் அனுபவித்திருக்கப் போகிறார்கள். மீராவிற்கு பக்தி இல்லை என்று சொல்ல முடியுமா?

ஒரு பெண்ணிற்கு அவளுடைய கற்பைப் பற்றி சொல்வதைவிட பெரிய குற்றம் என்ன இருக்க முடியும்! மீரா மீது அந்த காலத்தில் அத்தகைய குற்றம் சாட்டியவர்களும் உண்டு. ஆகவே, இத்தகைய பக்திக்கும் சுக, துக்க அனுபவங்களுக்கும் ஸம்பந்தம் இல்லை.

கேள்வி : அப்படியானால், நீங்கள் பக்தி செய்தால் கஷ்டமே வராது. வேலை கிடைக்கும். பணம் கிடைக்கும். வியாதி தீரும் என்றெல்லாம் காமிய பலன்களை தாங்கள் கூறுகின்றீர்களே! அது உண்மையில்லையா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : அது ஸத்யம்தான். உங்களுடைய பக்திக்கு அதுதான் உத்தேசமாக இருக்குமானால், நிச்சயம் அது நடந்தே தீரும். மீரா போன்ற உயர்ந்த மஹாத்மாக்கள் தங்களுடைய கஷ்டத்தை இறைவன் போக்க வேண்டும் என்று ஒருக்காலும் ப்ரார்த்திக்கமாட்டார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்த கஷ்டம் தீரவில்லை. அவர்கள் அனுபவித்த ஸுக, துக்கங்கள் லோகரீதியாகதான் இருந்ததே தவிர, அவர்கள் எப்பொழுதும் க்ருஷ்ண அனுபவத்தில் ஸதா மூழ்கியே இருந்தார்கள்.

கேள்வி : எனக்கு வாழ்க்கையில் எப்பொழுதும் கஷ்டங்கள் வந்து கொண்டே இருக்கிறது. நான் அதை எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டங்கள் வருகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாம் இறைவனுடன் நெருக்கத்தில் இருக்கின்றோம் என்று அர்த்தம். அந்த நேரத்தில் நம்மால் முன்பை விட நன்றாக இறைபக்தியில் மனம் உருகி ஈடுபட முடியும். வாழ்க்கையில் துக்கங்கள் ஸம்பவிக்காவிட்டால் நமது வாழ்க்கையில் ஒரு ஜீவத்தன்மை (liveliness) இல்லாமல் போய்விடும். நமக்கு எப்பொழுது எல்லாம் துக்கம் ஸம்பவிக்கின்றதோ அப்பொழுது எல்லாம் இறைவனுக்கு நன்றி சொல்லி பழகவேண்டும். எல்லாம் இறைவனுடைய கருணையால் ஏதோ ஒரு நன்மைக்காக நடக்கின்றது என்று திடமாக நாம் நம்பவேண்டும்.

கேள்வி : என்னுடைய நண்பர் ஒரு பக்தர், தினமும் பல கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபடுகிறவர். நான் இப்படியெல்லாம் செய்வது தேவை இல்லை என்றால் கேட்க மாட்டேன் என்கிறார். நான் என்ன செய்வது?

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீங்கள் ஏன் அப்படி சொல்ல வேண்டும்? தினமும் கோவிலுக்கு சென்று வழிபடுவதும் ஒரு பக்திதான். சிலருக்கு தினமும் பாராயணம் செய்ய வேண்டும். இதுவும் ஒரு பக்தி. சிலருக்கு ஒரு நாளைக்கு சில மணிநேரமாவது கீர்த்தனம் செய்ய வேண்டும். இதுவும்

ஒரு பக்தி. சிலருக்கு க்ஷேத்ராடனம் செல்லவேண்டும். இதுவும் ஒரு பக்தி. சிலருக்கு புண்ணிய தீர்த்தங்களில் நீராடவேண்டும். இதுவும் ஒரு பக்தி. சிலருக்கு கோவில்களுக்கு சென்று புஷ்பகைங்கர்யம் செய்யவேண்டும். இதுவும் ஒரு பக்தி. சிலருக்கு ஸாதுக்களுக்கு சென்று கைங்கர்யம் செய்ய வேண்டும். இதுவும் ஒரு பக்தி. எல்லாம் சரியே. அவரவர்களுக்கு பிடித்த விதத்தில் அவரவர்கள் ஈடுபடுகின்றனர். எந்தவிதமான பக்தியையும் குறை சொல்லக் கூடாது.

கேள்வி : யோகப்ரஷ்டர்கள் கூட கர்மாவுக்கு வசப்பட்டுதான் பிறக்கிறார்களா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஆம். யோகப்ரஷ்டர்களும் கர்ம வசத்தினால்தான் பிறக்கிறார்கள்.

கேள்வி : அவதார புருஷர்கள் கர்ம வசப்பட்டு பிறக்கிறார்களா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : இல்லை. அவதார புருஷர்கள் இச்சையினால், அதாவது தங்களது ஸங்கல்பத்தினால் பிறக்கிறார்கள்.

கேள்வி : அப்படி இருக்க, அப்படிப்பட்டவர்களுக்கும், வியாதி, சுக, துக்கங்கள் போன்றவை லோக ரீதியில் ஏற்பட என்ன காரணம்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : அவர்களை பலர் வந்து ஸேவிப்பதாலும், அவர்கள் பல பேருக்கு மந்த்ரோபதேசங்கள் செய்வதாலும், பலர் தாங்கள் செய்யும் புண்ணிய பலன்களை அவருக்கு அர்ப்பணித்து விடுவதாலும், அவர்களுக்கும் லோகரீதியாக சுக, துக்கங்கள் ஏற்படுகின்றன.

கேள்வி : மந்திரோபதேசம் செய்வதால் குருவிற்கு துக்கம் எப்படி ஏற்படும்?

பதில் : குருவானவர் ஒருவருக்கு மந்திரோபதேசம் செய்த பின்னர், மந்திரோபதேசம் பெற்றுக் கொண்டவர் செய்யும் அனைத்து பாபங்களும் குருவையே பாதிக்கும்.

முன் அட்டை படம் : சென்னை ப்ரேமிக பவனத்தில் தனுர் மாதத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ப்ரவசனம்

# வேத கதைகள் - 32

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஸுனச்யேபன் சரித்ரம்

சூரிய வம்சத்தில் ஹரிச்சந்திரன் என்ற அரசன் இருந்தான். அவன் தார்மீகனாகவும், உண்மை பேசுபவனாகவும் இருந்தான். அவன் அரசனாக இருக்கும்பொழுது குடிமக்களுக்கு எந்தக் குறையும் இல்லை. சந்த்ரமதி என்ற பதிவ்ரதை அவனுக்கு மனைவியாக இருந்தாள். இந்த தம்பதிகளுக்கு மக்கட்பேறு இல்லை. ஹரிச்சந்திரன் பிள்ளைபேற்றுக்காக தன் குலகுருவான வஸிஷ்டரை வேண்டினான். ரிக்வேதத்தில்,

ப்ரதீசி திக்பாகே வருணோ தேவதா
வருன ப்ரஸாதாத் புத்ர பௌத்ர அபிவர்த்தனம் அஸ்துதே

வருணன் அருள் கிட்டினால், பிள்ளை, பேரன்கள் பிறக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அதை மனதில்கொண்டு வருணனை வழிபட்டால் பிள்ளை பெறலாம் என்று வஸிஷ்டர் கூறினார். அரசனும் வருணனை வழிபட்டான். இதனால் மகிழ்ந்த வருணன், அரசனுடன் விளையாட எண்ணியவனாக அரசன் முன் தோன்றி, ''என்ன வரம் வேண்டும்? வேண்டியதை அளிக்கின்றேன்'' என்று கூறினான்.

அரசனும், ''தன் குலம் தழைக்கவேண்டும். ஆதலால் நல்ல புத்திரனை அளிப்பாயாக'', என்று வேண்டினான். வருணனும் அரசனுடன் விளையாட எண்ணியவனாக, ''உனக்கு நல்ல பிள்ளையை அளிக்கிறேன். ஆனால் உன் பிள்ளையையே எனக்கு யாகத்தில் ஹவிஸாக அளிக்க வேண்டும்'' என்று சொன்னான். அரசனும் பித்ருக்கள் கடன் அடைவதற்காக பிள்ளையை விரும்பினான். பிறக்கும் பிள்ளையை வருணனுக்கு அளிப்பதாகவும் ஒப்புக் கொண்டான். அரசனுக்கு காலத்தில் அழகான பிள்ளை பிறந்தது. ரோஹிதன் என்று பிள்ளைக்கு பெயர் இட்டான். பிள்ளை பிறந்தவுடன் வருணன் தோன்றி பிள்ளையை பசுவாக வைத்து யாகம் செய்யுமாறு கட்டளை இட்டான்.

அரசனுக்கு, பிள்ளை பிறக்கும் முன்பு, பிள்ளை பிறந்தால் வருணனுக்கு அளிக்கலாம் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் பிள்ளை பிறந்தவுடன் அதன் மீது பாசம் அதிகமாக ஆனதால், ஏதோ ஒரு காரணத்தைக் கூறி வருணனிடமிருந்து தப்பிக்கலாம் என்று

எண்ணியவனாக, ''தேவர்களுக்கு ஒரு பசுவை அளித்தால் அந்த பசுவிற்கு எல்லா அங்கமும் நிறைவு உள்ளதாக இருக்க வேண்டும். ஊனமுள்ள பசுவை தேவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆதலால் என் பிள்ளைக்கு பல் முளைத்தவுடன் அவனை வைத்து யாகம் செய்கின்றேன்'' என்று கூறினான். வருணனும் அதை ஏற்றுச் சென்றான்.

அரசனின் பிள்ளைக்கு பல் முளைத்த பிறகு வருணன் வந்தான். ''ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைஶ்யன் இம்மூவரும் பிறப்பினால் மட்டும் தூய்மை பெறுவதில்லை. ஜாதகர்மா முதல் உபநயனம் வரை நன்கு ஸம்ஸ்காரங்களை செய்தால்தான் தூய்மையடைகிறான். ஆதலால் என் பிள்ளைக்கு உபநயனம் ஆனதும் யாகம் செய்கின்றேன்'' என்றான் அரசன். வருணன் அதைக் கேட்டு கோபமுற்றவனாக, ''ஏதோ ஒரு காரணத்தைக் கூறி பிள்ளையை வைத்து யாகம் செய்வதை தள்ளிப்போடுகிறாய். நீ கேட்டுக் கொண்டதற்காக, உபநயனம் ஆகும்வரை பொறுத்துக் கொள்கின்றேன். பிறகும் யாகம் செய்யாவிடில் உன்னை சபிப்பேன்'' என்று கூறிச் சென்றான்.

அரசகுமாரனான ரோஹிதனும் தனக்கு உபநயனம் முடிந்தால் தந்தை தன்னை வைத்து யாகம் செய்வார் என்று அறிந்து யாரும் கண்டு பிடிக்கமுடியாத இடத்தில் ஒளிந்துகொண்டான். குறிப்பிட்ட காலத்தில் வருணன் வந்து யாகம் செய்யத் தூண்டியபொழுது, ''பிள்ளை எங்கேயோ சென்று ஒளிந்துவிட்டான். அவனை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை'' என்று அரசன் கூறினான். அதனால் கோபம் அடைந்த வருணன், ஜலோதரன் என்ற வியாதி ஏற்படுமாறு அரசனை சபித்தான். இதை நீர் கட்டி என்று கூறுவார்கள். அரசனும் இந்த வ்யாதியினால் மிகவும் துன்பமடைந்தான்.

ஒளிந்துகொண்டு இருக்கும் அரசகுமாரனும் தன் தந்தை துன்பப்படுகிறார் என்று அறிந்து தன்னை வருணனுக்கு அளித்து தந்தையின் துன்பத்தைப் போக்கலாம் என்று எண்ணி வெளிவந்தான். இதை அறிந்த இந்திரன், ''நீ செல்லாதே'' என்று அரசகுமாரனைத் தடுத்துவிட்டான். வியாதியால் வருந்தும் அரசன், ''என்ன செய்யலாம்'' என்று வஸிஷ்டரை வினவினான். வஸிஷ்டரும், ''யாராவது தன் பிள்ளையை விலைக்கு விற்றால் அந்த பிள்ளையை வாங்கி அவனை வைத்து யாகம் செய்யலாம் என்று பதில் அளித்தார். அப்பொழுது குசஸ்தம்பம் என்ற இடத்தில் வஸிக்கும் அஜீகர்த்தர் என்ற முனிவர் தன் நடுப்பிள்ளை ஸுனச்யேபனை பத்தாயிரம் பவுன்களுக்கு விற்றார். அரசன் ஸுனச்யேபனை அழைத்து வந்து அவனை வைத்து யாகம் செய்ய

ஆரம்பித்தான். இந்த யாகத்தில் வஸிஷ்டர் கலந்துகொள்ளவில்லை. வேறு சில முனிவர்கள் செல்வத்திற்கு ஆசைப்பட்டு மனிதனை வைத்து செய்யும் யாகத்தை நடத்தி வைக்க முன் வந்தார்கள். இந்த யாகத்திற்கு ஸுனச்யேபனின் தந்தை அஜீகர்த்தரும் வந்திருந்தார்.

யாகம் நடக்கும்பொழுது யூபம் என்ற தூணில் பசுவைக் கட்ட வேண்டும். இங்கு பசுவாக இருக்கும் ஸுனச்யேபனை யூபத்தில் கட்ட முனிவர்கள் தயங்கினார்கள். அப்பொழுது அஜீகர்த்தர் இன்னும் பத்தாயிரம் பவுன் கொடுத்தால் தன் பிள்ளையை தானே யூபத்தில் கட்டி, பர்யக்னிகரன் முதலிய சடங்குகளை செய்து சக்ஞபனம் செய்வதாக ஒப்புக்கொண்டார். அரசன் அவர் கேட்ட பொருள்களை அளித்தான். தந்தையே தனக்கு விரோதியாக இருப்பதை எண்ணி தனயன் வருந்தினான். தனக்கு மரண ஸமயம் வந்துவிட்டது என்று நடுங்கினான்.

அப்பொழுது, விஶ்வாமித்ரர் அரசனைப் பார்த்து, ''அரசனே! வயதான நீ மரணம் அடைவதில் தவறு ஒன்றுமில்லை. வாழவேண்டிய இளம் சிறுவனான இந்த முனிகுமாரனை அழித்து நீ வாழ விரும்பாதே'' என்று அறிவுரை கூறினார். அரசன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அப்பொழுது விஶ்வாமித்ரர், சிறுவனைக் காக்க விரும்பியவராக வருணனை துதிக்கும் ஒரு மந்த்ரத்தை சிறுவனுக்கு உபதேசித்தார். சிறுவனும் அந்த மந்த்ரத்தை முறைப்படி ஜபம் செய்தான். இதனால் மகிழ்ந்த வருணனும் அங்கு தோன்றி சிறுவனை யூபத்திலிருந்து அவிழ்த்து விட்டு உன் உயிருக்கு ஆபத்து இல்லை என்று கூறினான். அரசனிடம் சென்று அரசனின் வியாதியையும் போக்கினான். விஶ்வாமித்ரரின் இந்த துணிவைக் கண்டு யாவரும் அவரை போற்றினார்கள்.

அப்பொழுது இந்த ஸுனச்யேபன், ''எங்கு செல்வது'' என்று புரியாமல் தவிக்கும்பொழுது தந்தையான அஜீகர்த்தர், ''நம் வீட்டுக்கு செல்லலாம் என்று ஸுனச்யேபனை அழைத்தார். அப்பொழுது, ''என்னைக் கொன்று செல்வம் சேகரிக்க எண்ணிய நீர் என் தந்தையே இல்லை'' என்று கூறிவிட்டான், ஸுனச்யேபன். ''பணம் கொடுத்து பிள்ளை வாங்கினாலும் வருணனுக்காகத்தானே வாங்கினேன். ஆதலால், இவன் என் பிள்ளை இல்லை'' என்று அரசனும் கூறினான். வருணனும் தன் பிள்ளை இல்லை என்று கூறிவிட்டான்.

அப்பொழுது அங்கு வந்த வஸிஷ்டர், ''இச்சிறுவனுக்கு ஏற்பட்ட பெரிய ஆபத்தை விஸ்வாமித்திரர் விலக்கியதால், விஶ்வாமித்ரர்தான்

இவனுக்கு தந்தை என்று தீர்ப்பு கூறினார். பெற்றவன், உபநயனம் செய்விப்பவன், கல்வி கற்றுக்கொடுப்பவன், அன்னம் அளிப்பவன், பயத்தைப் போக்குபவன் இந்த ஐவரும் தந்தைகள் என்று வேத நூல்கள் கூறுகின்றன. விஶ்வாமித்ரரும் மகிழ்ந்து இவனை பிள்ளையாக ஏற்றுக் கொண்டு அவனுக்கு தேவநாதன் என்று புதுப்பெயர் அளித்து தன் ஆஶ்ரமத்திற்கு அழைத்துச் சென்றார். வைஶ்வாமித்ர, தேவநாத, ஔதர என்று விஶ்வாமித்ர கோத்ரத்தின் ப்ரவரத்திலும் அவன் இடம் பெற்றான். இந்தக் கதையானது க்ருஷ்ண யஜுர்வேதம், ஐந்தாவது காண்டத்தில், 2-வது ப்ரஶ்னத்தில், **"'ஸுனச்யேபம் அஜீகர்த்திம் வருணோ க்ருஷ்ணாத் ஸ ஏதாம் வாருணீ ம பஶ்யது தயாவை ஸ ஆத்மா வருணபாசாத் அமுஞ்சத்''** என்ற இடத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

ரிக்வேதத்திலும் இக்கதை விரிவாக கூறப்பட்டுள்ளது. அரசன் ராஜஸூயயாகம் செய்யும்பொழுது இந்தக் கதையைக் கூறவேண்டும். இக்கதையை கேட்டால் வருணபாசம் என்ற **ஸௌனஶ்யேபமாக்யாபயதே வருண பாஶா தேவைனே முஞ்சத்** என்று கூறப்பட்டுள்ளது. தேவி பாகவதத்திலும் இந்த உபாக்யானம் விரிவாக இருக்கிறது. சிறுவனுக்கு விஶ்வாமித்ரர் உபதேசித்த மந்த்ரம், ''உதுத்தமம்'' அல்லது ''இமம்மே வருண'' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஸாயம் ஸந்தியில் நாம் சொல்லி வருகிறோம். இதனால் நோய் விலகி நீண்ட ஆயுள் பெறலாம். ■


ஸ்ரீ ஹரி:

உதயாஸ்தமன ஸப்தாஹ ஶதக்ரது மஹோத்ஸவம்

தேதி : மே 10-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை

**ஸம்பூர்ண நாராயணீயம் பாராயணம்**

தேதி : மே 18-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில்,
குருவாயூர் மேப்பத்தூர் மண்டபத்தில் நடைபெறும்.

# எந்தரோ மஹானுபாவுலு - 20

உடையவர்களுடைய சீடர்களில் மஹாஉத்தமன் எனக் கொண்டாடப்பட்ட பிள்ளை உறங்காவில்லிதாசன் சரித்திரம் மிகவும் ப்ரஸித்தி வாய்ந்தது. ராமானுஜரது ஒவ்வொரு சீடரும் ஸ்ரீவைஷ்ணவத்தின் தர்மத்தையும், சிந்தனையையும் வெளிப்படுத்தும் கருவிகளாக இருந்தனர்.

நிசுளாபுரி என்னும் உறையூரில் வசித்து வந்த வில்லிதாசன் பெரிய மல்லன். சுற்றுப்புறத்தில் உள்ள அனைத்து மல்லர்களும் அவனுக்கு கப்பம் செலுத்தி வந்தார்கள். அரசனும், அவனை தன் அரசவை மல்லராக நியமித்து வைத்திருந்தான். இந்த வில்லிதாசன், பொன்னாச்சி என்ற மிக அழகிய தாசியிடம் பெரும் மையல் கொண்டு அவளையே மணந்தான். ஸதா அவளது அழகில் மயங்கிக்கிடந்தான். அவளது விசாலமான இரு கருவிழிகளின் அழகில் கவரப்பட்டு எந்நேரமும் அந்த விழிகளைப் பார்த்துப் பார்த்து பரவசம் அடைந்து கொண்டிருப்பான். ஒரு ஸமயம் ஸ்ரீரங்கம் வஸந்தோத்ஸவத்தைப் பார்க்க ஆசைப்பட்டாள் பொன்னாச்சி. பொன்னாச்சியைத் திருப்திப்படுத்த அவளை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கம் வந்தான் வில்லிதாசன். அச்சமயம், மிக வெயில் காலமாக இருந்ததால், வெயிலின் கொடுமையிலிருந்து பொன்னாச்சியைக் காப்பாற்ற எண்ணி அவளுக்குக் குடை பிடித்துக்கொண்டு அவள் கண்களையே பார்த்துக் கொண்டு நடந்து வந்துகொண்டிருந்தான்.

காவிரியில் நீராடி சீடர்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்த ராமானுஜர், இந்த காட்சியைக் கண்டு அதிசயித்து நின்றார். எதையும் லக்ஷியம் செய்யாத மல்லனின் தூய அன்பை நல்ல வழியில் திருப்ப வேண்டும் என ஸங்கல்பம் செய்துகொண்டார். மடத்தை அடைந்து வில்லிதாசனுக்குச் சொல்லி அனுப்பி வரவழைத்தார். அவன் வந்ததும் ''அப்பா நீ யார்? எதற்கு இங்கு வந்தாய்?'' என்று வினவினார். வில்லிதாசன் தன் வரலாற்றைச் சொன்னான். உடனே ராமானுஜர் ''மல்லனே, போரில் பலத்தையும், உயிரில் அலக்ஷியத்தையும் காட்டும் நீ, பொது இடங்களில் இப்படி அநாகரீகமாக ஒரு பெண்ணுக்குக் குடைபிடித்து நடந்து செல்வது அழகாகுமா?'' என்று கேட்டார். வில்லிதாசன் அதற்கு ''ஸ்வாமி, நான் காமத்தின் மேலீட்டால் இப்படிச் செய்யவில்லை. ஈடு இணையில்லாத அவளது அழகு என்னை பேரானந்தத்தில் ஆழ்த்துகிறது. முக்கியமாக அவளது கண்ணழகின்



வசீகரம் என்னை பரவசப்படுத்தி உலகை மறக்கச் செய்து விடுகிறது'' என்றான்.

உடையவர் வில்லிதாசனிடம் ''அப்பா நீ ரசிக்கும் கண்களின் அழகைவிட, அழகானதும், கருமை உள்ளதும், பெரியனவானதும் உள்ள கண்களை உனக்கு நான் காட்டினால் என்ன செய்வாய்?'' என்றார். வில்லிதாசன் உடையவரிடம், அப்படி நீர் செய்தீரானால் நான் அப்படிப்பட்ட கண்களுக்கு அடிமையாகிவிடுகிறேன். வேறெதையும் நோக்கவும் மாட்டேன்'' என்று உறுதியிட்டு சொன்னான். உடனே ராமானுஜர் வில்லிதாசனை அழைத்துக்கொண்டு ரங்கநாதன் ஸந்நதி முன் சென்று அழகிய மணவாளன் முன்பு நிறுத்தி, ''வில்லிதாசா, அதோ பார்! கடலினும் பெரியவான கண்கள்'' என்று பகவானது கண்களைக் காட்டினார். அரங்கனையும், ''வில்லிதாசனுக்கு கடாக்ஷம் அளிக்கவேணும்'' எனப் ப்ரார்த்தனை செய்துகொண்டார்.

அரங்கன் தனது பெரிய கருணை விழிகளால் வில்லிதாசனைப் பார்த்தான். வில்லிதாசனும் பார்த்தான். எந்தக் கண்களைக் கண்டால், மற்றொன்றினைக் காணவேண்டாம் என்று உறுதியாகத் திருப்பாணாழ்வார் கூறினாரோ அந்த வாக்கியத்திற்கு வில்லிதாசன் இலக்கானான். அன்று முதல் உலகத்து இன்பங்களையெல்லாம் துறந்து, மறந்து உடையவரின் அடிமையானான். பொன்னாச்சியும் ஆசிரமவாசியானாள். இருவரும் ஒரு குடிசை போட்டுக் கொண்டு மடத்தின் சீடர்களாக வாழ்ந்து வந்தனர்.

இப்படிப்பட்ட வைராக்கியமுள்ள சீடனைப் பெற்ற ராமானுஜர் பேருவகை அடைந்தார். வில்லிதாசன் ஏகாக்ரசித்தனாக உடையவருக்கு ஶிஶ்ருக்ஷை செய்து வந்தான். காவிரிக்கு நீராடச் செல்லும்போது உடையவர் முதலியாண்டான் கையைப் பற்றிக்கொண்டு செல்வார். நீராடித் திரும்பும்போது உடையவர், வில்லிதாசன் கையைப் பற்றிக்கொண்டு வருவார். கூட இருந்த மடத்து சீடர்கள், உடையவர் அனாசாரமாக இருக்கிறார் என்று மனதில் நினைத்து திகைத்தார்கள். இதை அனுமானித்த உடையவர் அவர்களைப் பார்த்து, ''வில்லிதாசனுக்கு நான் அவன் கையைப் பிடித்துக் கொள்வது பெருமையாக இருக்கும். அவன் வினயமுள்ளவன்'' என்று சொன்னார். ஆனால் சீடர்களுக்கு ஸமாதானம் ஏற்படவில்லை.

ஸ்ரீராமானுஜர் வில்லிதாசனின் உயர்வை மற்றவர்களுக்கு காட்ட எண்ணி, மறுநாள், மடத்து ப்ராஹ்மணர்கள் உலர்த்தி இருந்த துணிகளிலிருந்து ஒரு சாண் வீதம் கிழித்துவிட வில்லிதாசனுக்குக் கட்டளை இட்டார். குருவின் உத்தரவை சிரத்தையுடன் நிறைவேற்றினான்

வில்லிதாசன். துணிகள் கிழிக்கப்பட்டிருப்பதைக் கண்ட அந்தணர்கள் பெருங்கூச்சல் போட்டார்கள். பேசக் கூடாத வார்த்தைகளை வில்லிதாசனை நோக்கி பேசினார்கள். ராமானுஜர் அவர்களை அழைத்து, ''மிலேச்சனும் பேசக் கூசும் வார்த்தைகளை நீங்கள் எப்படிப் பேசுகிறீர்கள்'' எனக் கடிந்து கொண்டார்.

சில நாட்கள் கழித்து, அந்த ப்ராஹ்மணர்களில் சிலரை வரவழைத்து மடத்தில் பணத்தட்டுப்பாடாக உள்ளது என்றும் எப்படியாவது பொன்னாச்சியின் ஆபரணங்களைத் திருடிக் கொண்டு வந்தால் அந்த வருஷத்து செலவை ஸமாளிக்கலாம் என்றார். மல்லனுக்கு அஞ்சிய ப்ராஹ்மணர்களை, ''மல்லனைப்பற்றி பயப்படாதீர்கள். நான் அவனை என்னுடனேயே வைத்துக்கொள்கிறேன்'' என்றார். அப்படியே அன்று வில்லிதாசனை தன்னுடன் இருத்திக்கொண்டார்.

நள்ளிரவில், வில்லிதாசன் குடிசைக்குச் சென்ற அந்தணர்கள், மெதுவாக குடிசைக் கதவைத் திறந்தார்கள். பொன்னாச்சி ஒருக்களித்து கதவுக்கு முதுகு காட்டிப்படுத்திருந்தாள். அந்தணர்கள், உறங்குபவளிடமிருந்து ஒரு பக்கத்து ஆபரணங்களைக் கழற்றிக்கொண்டார்கள். லேசாக உணர்வடைந்த பொன்னாச்சி, மற்றொருபுறத்து ஆபரணங்களையும் அவர்கள் கழற்றிக் கொள்ள வசதியாக திரும்ப யத்தனித்ததும், அந்தணர்கள் அஞ்சி ராமானுஜரிடம் ஓடி நடந்ததைச் சொல்லி நகைகளைக் கொடுத்தார்கள்.

தன் குடிசைக்குச் சென்ற வில்லிதாசனிடம், பொன்னாச்சி நடந்ததைச் சொன்னதும், ''அடியார்கள் வந்தது தெரிந்ததும், அவர்களை வணங்கி நீயே நகைகளை அவர்களுக்கு ஸமர்ப்பிக்க வேண்டியதுதானே. ஏன் இப்படி நாடகமாடினாய்?'' என்று சினந்து, ''இனி, நீ இப்படி ஒரு பக்கத்து நகைகளை மட்டும் அணிந்து கொள். உனக்கு அதுபோதும்'' என்று வில்லிதாசன் உத்தரவிட்டான். மறுநாள், உடையவர், பொன்னாச்சியின் நிலைமையைப் பார்த்து விசாரிக்க, ''ஸ்வாமி! நாங்கள், குடிசைக்கு வந்த அந்தணர்களின் பாததூளிகள். நாங்கள் செய்த அபசாரத்துக்கு என்ன செய்ய?'' என்று இருவரும் கண்ணீருடன் கைகூப்பிக் கேட்டனர். உடனே ராமானுஜர் அந்தணர்களைப் பார்த்து, ''இவர்களது உயர்ந்த தாஸவிருத்தியைப் பார்த்தீர்களா? ஒரு சாண் வேஷ்டி போனதற்கு என்ன கூச்சல் போட்டீர்கள்? வேதம் சொல்லும் வாயால் மிலேச்சரும் சொல்லக்கூசும் வார்த்தைகளைப் பேசினீர்களே? நான் நீராடியதும் இவன் கையைப் பற்றிக் கொள்வதற்கு கசந்தீர்களே. நான் பற்றிக் கொள்ள இவனைவிட சிறந்த பாகவதன் கை எங்கு கிடைக்கும்'' என்றார். அந்தணர்கள் வெட்கி மௌனம் ஸாதித்தார்கள்.

ஜாதியால் மட்டும் உயர்வு இல்லை என்பதற்கு விளக்கம் காட்டவே ராமானுஜர் இப்படி ஒரு நிகழ்ச்சியை சிருஷ்டித்தார்.

முதலியாண்டானும் ஸாதாரணமான பெருமை வாய்ந்தவரில்லை. உடையவருக்கு அவரது ப்ரபாவமும் நன்கு தெரியும். அவரது பெருமையை விளங்கச் செய்யவும் உடையவர் ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தினார்.

பெரிய நம்பியின் மகளான அத்துழாய், ஒருநாள் காவேரிக்கு நீராடச் செல்வதற்காக தன் மாமியாரைத் துணைக்கு அழைத்தாள். ''நீதான் பிறந்த வீட்டிலிருந்து ஏராளமான பணிப்பெண்களை அழைத்து வந்திருக்கிறாயே. அவர்களில் ஒருவரை அழைத்துப் போவதுதானே! என்னை ஏன் தொந்தரவு செய்கிறாய்? என்று ஏளனமாக எரிந்து விழுந்து பேசினாள். தன் பிறந்த வீட்டு ஏழ்மையை சுட்டிக்காட்டி, மாமியார் பேசியதில் வருத்தமடைந்த அத்துழாய், தன் தந்தையிடம் வந்து அழுதுகொண்டே, நடந்ததைத் தெரிவித்தாள். அவரோ, ''இதற்கெல்லாம் உன் ஜீயர்தான் பொறுப்பு'' என்று அஶ்ரத்தையாய் சொல்லிவிட்டு அகன்றுவிட்டார். அத்துழாய் மேலும் வருத்தமடைந்து நேரே ராமானுஜரிடம் வந்து முறையிட்டாள். ராமானுஜர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு, ''உனக்கு ஒரு வேலையாள்தானே வேண்டும்'' என்றார். அவள் 'ஆம்' என்றதும், உடனே முதலியாண்டானைக் காட்டி ''இதோ உன் பணியாள். இவனை அழைத்துப் போ. அவன் உனக்கு பணிவிடைகள் செய்வான்'' என்றார். அத்துழாய் பிரமித்து நிற்கையிலேயே முதலியாண்டான், ''வா அம்மா உன் வீட்டிற்கு செல்வோம்'' என்றான்.

அன்று முதல் முதலியாண்டான், அத்துழாய் வீட்டு அத்தனை வேலைகளையும் செய்யலானார். மலர்ந்த முகத்துடன் வீடுபெறுக்கல், முற்றம் தெளித்தல், துணி துவைத்தல், காவேரியிலிருந்து நீர் கொணர்தல் முதலிய அனைத்து வேலைகளையும் பொறுமையுடனும், திறமையுடனும் செய்துவந்தார். பரம பாகவதனும், பண்டிதனுமான முதலியாண்டான் இப்படி ஈனத் தொழில் செய்வதைக் கண்டு பயந்த அத்துழாயின் புகுந்த வீட்டுப் பெரியவர்கள் முதலியாண்டானை வணங்கி, ''ஸ்வாமி! தாங்கள் இப்படி செய்யலாமா? நாங்கள் அபசாரப்பட்டுப் போனோம். இது நியாயமா?'' என்று வினவினார்கள். அப்பொழுது முதலியாண்டான், ''எனக்கு ஏதும் தெரியாது. இது ஆசார்யன் உத்தரவு. அதை நான் செய்கிறேன். தயவு செய்து என் வேலையில் குறுக்கிடாதீர்கள்'' என்றார்.

உடனே அத்துழாயின் மாமனார் வீட்டுப் பெரியவர்கள், நேரே பெரியநம்பிகளிடம் சென்று, ''என்ன நம்பிகளே! எங்கள் குடும்பத்தை

வேரோடு அழிக்கத் தீர்மானித்துள்ளீரா? முதலியாண்டான் எங்களிடம் வேலை செய்ய எங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?. தயவு செய்து அவரைத் திருப்பி அழைத்துக் கொள்ளுங்கள்'' என்றனர்.

''எனக்கு இது பற்றி ஏதும் தெரியாது. ஆசார்யனைக் கேளுங்கள்'' என்றார் பெரியநம்பி. அவர்கள் நேரே ராமானுஜரிடம் சென்றனர். முறையிட்டு விஷயத்தைக் கூறினார்கள். ராமானுஜர் மெதுவாக பதில் சொன்னார். ''உங்கள் வீட்டு எசமானி, உங்கள் நாட்டுப் பெண்ணை, அவள் பிறந்தகத்திலிருந்து வேலைக்காரனொருவனை அழைத்து வருமாறு உத்தரவிட்டாளாம். நானும் முதலியாண்டானும் பெரியநம்பியின் அடிமைகள். முதலியாண்டானை உங்களுக்குப் பிடிக்காவிட்டால் அவருக்கு பதில் நான் வேண்டுமானால் வருகிறேன் அப்படி அவன் உங்கள் வீட்டிலிருந்து பணி செய்வது உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால், மடத்திலிருந்து கொண்டே அவன் உங்கள் வேலைகளைக் கவனிப்பான்'' என்றார்.

அவர்கள் வெட்கத்தால் தலை குனிந்து, உள்ளத்தால் வேதனைப்பட்டு, கண்ணீர் விட்டு ராமானுஜரை வணங்கி அபசாரம் பொறுத்தருள வேண்டினர். முதலியாண்டான் திருப்பி அனுப்பப்பட்டான். ஆசார்யன் இட்ட அடிமை வேலையை தமக்குக் கிடைத்த பாக்யமாக கருதி, சிறப்பாக அதைச் செய்த முதலியாண்டான் பணிவுதான் என்ன? தன்னலமற்ற அவரது ஆசார்யபக்தியைக் கண்டு ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயமே வியந்தது.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

---

பண்டைய பாரதத்தின் பெருமை (பின் அட்டைப்பக்கத் தொடர்ச்சி)

நாம் இவற்றிலிருந்து தெரிந்து கொண்டது இந்தியாவைப் பற்றிய சில துளிகளே. ஆனால், இவற்றின் சுவடு கூட இன்று காணவில்லை என்றால், நாம்தான் நமது திறமையை ஒழுங்காக உபயோகப்படுத்திக் கொள்வதில்லை என்றாகும். இந்தியர்களான நாம் நம்மை சரியாக மாற்றிக்கொண்டோமேயானால் வருங்கால பாரதம் வலிமையானதாக மட்டுமல்ல, ஒளிமிக்கதாகவும் கூட இருக்கும். அது மட்டுமல்ல, நம்மைப் பின்பற்றி உலகமே நடக்க ஆரம்பிக்கும்.

# திருப்பாவை

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ஸம்ஸாரிகளை கரையேற்றுவதற்காக பகவான் படுகின்ற பாடுதான் அதிகம். இதில் இருவருக்குமே அடம் இருக்கிறது. ஸம்ஸாரிகளை கரையேற்றவேண்டும் என்று பகவான் அடம் பிடிக்கிறான். பகவானிடம் அகப்படாமல், கரையேற மாட்டோம் என்று ஸம்ஸாரிகள் அடம் பிடிக்கின்றனர். அதற்காக மனிதர்கள் படாத பாடும் படுகின்றனர். ''மனிதர்களாக படாதபாடுபட்டு'' என்று பூர்வ ஆச்சார்யர்கள் சொல்கின்றனர்.

ஸ்ரீவைகுண்டத்தில் பகவானுக்கு கைங்கர்யம் செய்பவர்கள் நித்யசூரிகள். அவர்களே திவ்யசூரிகள் எனப்படுவர். அவர்கள் பாடிய கோவில்களே திவ்யதேசங்கள். அவர்கள் பாடிய மங்களாஸாஸன பாசுரங்களே திவ்ய ப்ரபந்தங்கள். **''கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: பரோக்ஷ ப்ரிய: தேவ:** என்றும் வேதம் சொல்கின்றது. மஹரிஷிகளுக்கும், மனிதர்களுக்கும் இடையே மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்யாஸம் இருக்கின்றது. மஹரிஷிகளுக்கும், ஆழ்வார்களுக்கும் உள்ள வித்யாஸம் ஸாதாரண மலைக்கும், இமய மலைக்கும் உள்ள வித்யாஸம்.

மஹரிஷிகள் காட்டுகின்ற தெய்வங்கள் கண்ணுக்கு புலப்படாதது. ஆனால், ஆழ்வார்கள் காட்டுகின்ற தெய்வமோ, எந்த யோக்யதையும் இல்லாதவர்களும் காணும்படி, அர்ச்சாவதாரத்தை, ''திரு அல்லிக்கேணி கண்டேனே'', ''தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகன் ஊர் அரங்கமன்றோ'' என்று பாடியுள்ளனர். மேலும் ஆழ்வார்கள் காட்டுகின்ற தெய்வத்தை எல்லோராலும் ஸுலபமாக பார்க்க முடியும்.

ஆழ்வார்கள் வெவ்வேறு காலகட்டத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அடையவேண்டிய வஸ்து நாராயணன் என்பதிலும், நாராயணனை அடைவதற்கான வழி நாமகீர்த்தனம் என்பதிலும், அவனுடைய கைங்கர்யமே புருஷார்த்தம் என்பதிலும் அவர்களுக்குள் எந்த அபிப்ராய பேதமும் இல்லை. ஆனால், மஹரிஷிகள், ஒரே காலகட்டத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களிடம் ஸாதாரண அனுஷ்டான விஷயம் முதற்கொண்டு அநேக அபிப்ராய பேதங்கள். ஆகவே, இந்த ரீதியிலும், ஆழ்வார்கள் மஹரிஷிகளைக் காட்டிலும் ஶ்ரேஷ்டமானவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே ஊரில் இருந்து

வந்தவர்கள். ஆதலால், ''பேசிற்றே பேசலல்லால்'' வேறு ஒன்றும் தன் அபிப்ராயமாக பேச மாட்டார்கள்.

ஆழ்வார்களுடைய ஞானம் க்ருபையினால் ஏற்பட்டது. ஆனால் மஹரிஷிகளுடைய ஞானம் அவரவர்களுடைய வித்தை, உபாஸனை, தபோபலம் இவைகளை அடிப்படையாகக் கொண்டது. இவற்றிற்கெல்லாம் ஒரு வரையறை உண்டு.

ஆழ்வார்கள் பன்னிருவர் என்ற போதிலும், மதுரகவியாழ்வார், ஆசார்யனைப் பாடினதாலும், ஆண்டாள் ''பிராட்டி'' என்ற ஸ்தானத்தோடு சென்றுவிட்டதாலும் அவர்களைத் தவிர்த்து ஆழ்வார்கள் பதின்மர்

1. பொய்கையாழ்வார், 2. பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4. திருமழிசை ஆழ்வார், 5. நம்மாழ்வார், 6. குலசேகராழ்வார், 7. பெரியாழ்வார், 8. தொண்டரடிப்பொடியாழ்வார், 9. திருப்பாணாழ்வார், 10. திருமங்கை ஆழ்வார் ஆவார்கள்.

மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் பெரியாழ்வாருக்கு தனித்துவம் உண்டு. மீதி ஆழ்வார்களுக்கு பெருமாளிடம் பரிவு, பெரியாழ்வாருக்கோ பொங்கும் பரிவு. தன்னுடைய பெண், கோதையை ரங்கனுக்கு விவாஹம் செய்துகொடுத்தபடியால் ''பல்லாண்டு'' பாடி ''நின்சேவடி செவ்வி திருக்காப்பு'' என்கின்றார். ஆகவே, வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பெரிய கோவில் என்றால் ஸ்ரீ ரங்கநாதர் கோவில், பெரிய பெருமாள் என்றால் ஸ்ரீ ரங்கநாதர், பெரியபிராட்டி என்றால் ஸ்ரீ ரங்கநாயகி தாயார், பெரிய ஜீயர் என்றால் மணவாளமாமுனிகள், நாலாயிரம் பாசுரத்திற்கும் வ்யாக்யானம் செய்தவர் பெரியவாச்சான் பிள்ளை, பெரிய பெருமாளை மங்களாஸாஸனம் செய்த ஆழ்வார் பெரியாழ்வார். பத்து ஆழ்வார்களின் ஒரே ஸஹோதரர் பெரியாழ்வார். அவருடைய ஒரே குமாரத்தியாக ஆண்டாள் இருப்பதால் அவர்கள் அனைவருடைய ஸ்ரீதனமும் ஆண்டாளை வந்தடைந்தது.

ஆண்டாள் திருப்பாவையோ வேதம் அனைத்திற்கும் வித்தாக உள்ளது. ஸ்ரீமத் ராமாயணம், பாகவதம், பாரதம் போன்ற இதிஹாஸங்கள் கூட வேதத்தின் ஸாரம்தான். ஆனால் திருப்பாவையின் ஸாரம்தான் வேதமாக உள்ளது. வேதத்தின் பரம ஸாரமான உபநிஷத்தைக் காட்டிலும் திருப்பாவை ஶ்ரேஷ்டம். காரணம் என்னவென்றால், உபநிஷத், அஜ்ஞானிகளைப் பார்த்து, ''உத்திஷ்டத! ஜாக்ரத! ப்ராப்யவரான்! (பலன் அடை), நிபோதத!'' என்று சொல்கின்றது. ஆனால் திருப்பாவை அஜ்ஞானிகளான நம்மையும் எழுப்புகின்றது. பகவானையும்

எழுப்புகின்றது. ஆச்சார்யர்களான ஆழ்வார்களையும் எழுப்புகின்றது.

ஆழ்வார்கள் அஜ்ஞானிகள் அல்லவே. அவர்களை எழுப்ப வேண்டும் என்ற அவஶ்யம் என்ன? என்றால், அனைவரும் ஆழ்வார்களின் அனுபவங்களை அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணத்தினால்தான் ஆழ்வார்களை திருப்பாவை எழுப்புகின்றது. நம்மாழ்வார் 16 வயது வரை புளியமரத்தடியில் ஏகாந்தத்தில் அனுபவித்த விஷயத்தை, கோஷ்டியாக அனுபவிக்க நமக்கு அருள் செய்தவர், அவரை எழுப்பிய மதுரகவியாழ்வார்.

அதுபோல் கோபிகைகளும் அஜ்ஞானிகள் அல்லரே. ''கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்'' என்கிறாள் ஆண்டாள் தனது திருப்பாவையில். தங்களுடைய பகவத் விஷயத்தை கோஷ்டியாக அனுபவிக்கவே எல்லோரையும் எழுப்புகின்றனர். பகவத் கீதையைக் காட்டிலும் ஶ்ரேஷ்டம் திருப்பாவை. பகவத் கீதையில் பலவிதமான ஸாதனைகளைச் சொல்லி பயமுறுத்தி, கடைசியாக, ''மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ'' என்று கூறுவதை, துணிந்து, திருப்பாவையில் முதற் பாசுரத்திலேயே ''நாராயணனே நமக்கே பறைதருவான்'' என்று கூறியுள்ளதாலும், திருப்பாவை ஶ்ரேஷ்டம்.

கலிபிறந்து 97 வருடங்கள் கழித்து நளவருடம் ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமத்தில், ஸ்ரீ விஷ்ணுசித்தரால் கண்டு எடுக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட பெண் ஆண்டாள். ஆண்டாளுக்கு பெரியாழ்வார், கோதை என்று பெயரிட்டார். கோதை என்பதற்கு மாலை என்று அர்த்தம். ஆண்டாளுக்கும் கர்ப்பவாஸம் கிடையாது. சீதைக்கும் கர்ப்பவாஸம் கிடையாது. ஆனால் சீதையைக் காட்டிலும் ஆண்டாள் ஶ்ரேஷ்டமானவள். காரணம், விபீஷணனிடம் ரங்கநாதரைக் கொடுக்கும் ராமர், ''ஆராதய ஜகந்நாதம் இக்ஷ்வாகு குலதைவதம்'' என்று கொடுக்கிறார்.

ப்ரஹ்ம லோகத்தில் இருந்த ஸ்ரீ ரங்க விமானத்தை ''இக்ஷ்வாகு'' அயோத்திக்கு எழுந்தருளச் செய்கின்றான். மாம்தாதா, திலீபன் எல்லோரும் பூஜை செய்தது. அதே குலத்தில் வந்த தஶரத மஹாராஜா ஒரு யாகம் செய்தார். சோழ தேசத்து ராஜா அந்த யாகத்தில் ரித்விக்காக கலந்து கொண்டான். யாக தக்ஷிணையாக ரங்கநாத விமானத்தைக் கேட்டான். தஶரதர் தர மறுத்தார். அவன் அங்கிருந்து புறப்பட்டு காவேரி தீரத்தில் வந்து ரங்க விமானத்தைப் பெற தபஸ் செய்தான்.

தசரதர் ஆராதித்த ஸ்ரீ ரங்க விமானத்தை ஸ்ரீராமரும் ஆராதித்தார்.



ராமாவதாரம் முடிந்தபோது, ஸ்ரீ ராமர் விபீஷணனிடம், ''ஆராதய ஜகந்நாதம் இக்ஷ்வாகு குலதைவதம்'' என்று தன்னுடைய முன்னோர்கள் ஆராதித்த தன்னுடைய குலதைவத்தை விபீஷணனிடம் கொடுத்தார். விபீஷணன் அசுரனானபடியால், ரங்க விமானத்தை அப்படியே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு தன் நாடு திரும்பும்பொழுது, ரங்கநாதரை காவிரி தீரத்தில் அனுஷ்டானத்திற்காக வைத்தார்.

அங்கே தவம் செய்து கொண்டிருந்த சோழராஜா கண் திறந்து பார்த்த பொழுது ரங்கநாதன் எதிரே இருப்பது கண்டு மகிழ்ந்தான்.

விபீஷணன் திரும்பி வந்தபோது, ரங்கநாதர், தான் அங்கேயே இருக்கப் பிரியப்படுவதாகவும், அவனுடன் வர இயலாது என்றும் கூறிவிட்டார். இந்த ரங்கனை அரவணைத்து போவதற்காகவே காவிரி இருபுறங்களிலும் ஓடுகின்றாள். சந்த்ர புஷ்கரணியும் அங்குதான் இருக்கிறது. சந்த்ர புஷ்கரணி வழியாகத்தான், அர்ச்சிராதி மார்கங்களில் பகவான் ஒவ்வோரு ஜீவனையும் வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்கின்றான். இதனால் ஸ்ரீரங்கம் பூலோக வைகுண்டமாக இருக்கிறது.

ஸீதை கல்யாணம் செய்து கொண்டது, இந்த ஸ்ரீ ரங்கநாதனின் அர்ச்சகரான ஸ்ரீராமரைத்தான். ஆனால் ஆண்டாள் மணம் செய்ததோ ஸாக்ஷாத் ரங்கநாதனையே. இவ்விதத்தில் ஆண்டாள் ஸீதையினும் ஶ்ரேஷ்டமாக உள்ளாள். ஸீதை, ருக்மிணி மையல் கொண்டது அவதார காலத்தில் இருந்த பகவானிடத்தில். ஆண்டாள் காதல் கொண்டதோ அர்ச்சாவதார ஸ்ரீரங்கநாதனிடம். இந்த விதத்திலும் ஆண்டாளிற்கு தனித்தன்மை.

ஜனாபாய், சக்குபாய், மீரா போன்றவர்கள் பெரிய பக்தர்கள்தான். ஆனாலும் அவர்கள் பிராட்டி என்ற ஸ்தானத்தை அடையவில்லை. ஆனால், ஆண்டாள் பக்தர் கோஷ்டியினரான ஆழ்வார்களிலும் இருக்கிறாள். பிராட்டி என்ற ஸ்தானத்திலும் இருக்கிறாள். ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்று மூன்று தேவியர்கள், எம்பெருமானுக்கு உண்டு. ஸ்ரீதேவி கருணையே வடிவானவள். கருணை செய்வதற்கு வ்யாஜம் தேவை. பூமாதேவி பொறுமை வடிவானவள். பொறுமை கூட சில ஸந்தர்ப்பங்களில் தோஷமாகிவிடும். ஆனால் நீளாதேவியோ ப்ரேமை வடிவானவள். ஸம்விதி - ஞான ஶக்தி, ஸந்தினி-க்ரியா ஶக்தி, ஹ்லாதினி - இச்சா ஶக்தி. இச்சா ஶக்தியான ஹ்லாதினி ஶக்திதான் (ப்ரேமை) ஆண்டாள் ஆகவும், ராதையாகவும் அவதாரம் செய்கின்றாள். ஸீதை, ருக்மிணி போன்றவர்கள் செய்தது பதிபக்திதான். பகவத்பக்தி இல்லை. ஆனால் ஆண்டாள் செய்த பக்தி பதிபக்தி. பகவத் பக்தியும்கூட.

வைஷ்ணவ ஸாம்ரஜ்யத்தை ஸ்தாபித்த ராமானுஜருக்கு திருப்பாவை ஜீயர் என்று பெயர். நாலாயிரம் திவ்ய ப்ரபந்தங்களில் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த திருநெடுந்தாண்டகம் 30 பாசுரங்கள். இந்த முப்பது பாசுரங்களில் பராசர பட்டருக்கு ஈடுபாடு. திருப்பாவை 30 பாசுரங்களில் ராமானுஜருக்கு ஈடுபாடு. ஒரு ஸமயம் பாஷ்யகாரரை அனைவரும் திருப்பாவை காலக்ஷேபம் செய்யச் சொன்னார்கள். அதற்கு அவர், ''திருப்பாவை சொல்வதற்கு ஸ்த்ரீகள்தான் அதிகாரிகள். அதைக் கேட்பதற்கும் ஸ்த்ரீகள்தான் அதிகாரிகள்'' என்று சொல்லி விட்டார். சொல்லக்கூடிய ஸ்த்ரீ ஆண்டாள். கேட்கக்கூடிய ஸ்த்ரீகள் கண்ணன் மேல் விழும் கோபிகைகளே'' என்று கூறிவிட்டார். ஒரு ஸமயம், ஸ்ரீரங்கம் ரங்கநாத பெருமாளுக்கு கோகுலாஷ்டமி உத்ஸவம் நடைபெற்றது. புறப்பாடு, உறியடி உத்ஸவம் நடைபெற்றது. பராஸர பட்டரும் அதில் கலந்துகொண்டார். பராஸரபட்டர் வேத ஶாஸ்த்ர ப்ராஹ்மண கோஷ்டியில் அக்ரஸ்தானம் வகித்தவர். பராஸரபட்டர், உறியடி உத்ஸவத்தில் தன்னை மறந்து, பாவ ஆவேசத்தினால் இடையர் கோஷ்டியில் சேர்ந்து தானும் உறியடிக்க ஆரம்பித்துவிட்டார். ப்ராஹ்மணர்கள், ''ஸ்வாமீ! தேவரீர் இங்ஙனம் செய்யலாமா? என்று கேட்டதற்கு, பட்டரோ, ''இன்று க்ருஷ்ணானுக்ரஹம் அந்த கோஷ்டியில்தான்'' என்று சொல்லிவிட்டார்.

ஆண்டாள் முப்பது பாசுரங்கள் அனுகரணம் செய்தது பாவ ஆவேசத்தில். பாவ ஆவேசம் மார்கழி மாதம் முப்பது நாட்களும் இல்லை. இருபத்திஒன்பது நாட்கள்தான். ஏன் என்றால் 30வது பாசுரத்தில் பட்டர்பிரான் கோதை சொன்ன என்று சொல்லிவிட்டதால் தன் நிலை தெரிந்துவிட்டது ஆண்டாளுக்கு. பாவ ஆவேசத்தில் இருக்கும் ஆண்டாளிற்கு இடை உடை, இடை நடை, இடைமுடை எல்லாம் இடையர்கள் மாதிரியே வந்துவிட்டது. கோபி பாவம் பூரணமாக ஸித்தித்து விட்டது. (கோபிகைகள், இடது கை எது, வலது கை எது என்று தெரியாதவர்கள். தலையை மட்டும் சிலகாலமும், உடலை மட்டும் சிலகாலமும் நீராடுவார்கள். அதுவும் கார்த்திகைக்கு கார்த்திகைதான் ஸ்நானம் செய்வார்கள்).

i. முதல் 5 பாசுரங்கள், ''மார்கழி திங்கள்'' முதல் ''மாயனை மன்னு'' வரை - அவதாரிகையாக உள்ளது.

ii. 6-வது பாசுரம் முதல் 15-வது பாசுரம் வரை ''புள்ளும் சிலம்பின காண்'' முதல் ''எல்லே இளங்கிளியே'' வரை பத்து பாசுரங்கள் கோபிகைகளை எழுப்புகின்றன.

iii. 16-வது பாசுரம் முதல் 20-வது பாசுரம் வரை ''நாயகனாய் நின்ற''

முதல் ''முப்பத்து மூவர்'' வரை த்வாரபாலகர்களான ஜய, விஜயர்களையும், நந்தகோபனையும், யசோதையையும், பலராமனையும், நப்பின்னையையும் எழுப்புகின்றது.

iv. 21-வது பாசுரம் முதல் 29-வது பாசுரம் வரை

21-ல் - பகவானை எழுந்திருக்க ப்ரார்த்திக்கிறான்.

22-ல் - பகவான் எழுந்தவுடன் ''அங்கண்மாஞாலத்து'' எனும் பாசுரத்தில் தன்னை கடாக்ஷிக்க பிரார்த்திக்கிறாள். இது ப்ரணய காலத்திய கடாக்ஷம்.

23-ல் - ப்ரணய காலத்தில் பொய் சொல்லலாம் என்பதால் அப்பொழுது செய்த கடாக்ஷம் பொய்யாகவும் இருக்கலாம் என்பதால், ''மாரி மலை'' பாசுரத்தில், நீ வெண்குற்றக் குடையின் கீழ், சீரிய சிங்காதனத்தின் மேலிருந்து அனுக்ரஹம் செய். அது பொய்யாக முடியாது என்கிறாள்.

24-ல் - அப்படி நடந்து வந்து அனுக்ரஹம் செய்வதற்காக''அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி'' என்று பகவானுக்கு மங்களாஸாஸனம் செய்கின்றாள்.

25-ல் - ''ஒருத்தி மகனாய் பிறந்து'' எனும் பாசுரத்தில் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறாள்.

26-ல் - ''மாலே மணி வண்ணா'' பாசுரத்தில் நோன்புக்கான ஆபரணங்களையும், ''பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சஜன்னியமே'' என்று உபகரணங்களையும் கேட்கின்றாள்.

27-ல் - ''கூடாரை வெல்லும்'' பாசுரத்தில் பகவத் அனுபவத்தை கோஷ்டியாக அனுபவிக்க வேண்டுகிறாள்.

28-ல் - ''கறவைகள் பின்சென்று'' என்ற பாசுரத்தில் ''அறிவொன்றும் இல்லாத'' என்று ஶரணாகதி செய்கின்றாள்.

29-ல் - ''சிற்றஞ் சிறுகாலே பாசுரத்தில்'', ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்'' என்று பிடிவாதமாக கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறாள்.

30வது பாசுரம் மட்டும் கோதையாக இருந்து பாடியது. இதில் திருப்பாவை முழுவதையும் ஸேவிப்பவர்கள், ''செங்கண் திருமுகத்து செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவரெம்பாவாய்'' பெருமாளின் திருவருள் பெற்று இன்புறுவர் என்று பாடி முடிக்கிறாள்.

ஆண்டாள் திருவடிகளே ஶரணம்



# பாலகர்களுக்கு ஒரு கதை - 26

- ஸ்ரீ ஸ்வாமிகள்

## நம்பிக்கையும் முயற்சியும்

ஒரு தோப்பில் ஒரு பறவை வெகுகாலம் தனிமையில் வஸித்து வந்தது. சிலகாலம் கழித்து ஒரு ஆண் பறவையை விவாகம் செய்து கொண்டு ஸந்தோஷமாக வாழ்ந்து வந்தது. அப்பறவை, தன் கூட்டில் முட்டைகளை இட்டு, அடைகாத்து, குஞ்சு பொறிக்கும். ஒரு ஸமயம், அப்பறவை அக்கூட்டில் முட்டையிட்டது. அந்த முட்டையை ஒரு பெரிய கழுகு தூக்கிச் சென்றது. தூக்கிச் செல்வதைப் பார்த்த பெண் பறவை, அந்த கழுகைப் பார்த்து சப்தம் செய்துகொண்டு துரத்தியது. வெகுதூரம் வரை சென்ற அந்த கழுகானது முட்டையை கடலில் போட்டுவிட்டு சென்றுவிட்டது. முட்டை கடலில் விழுந்ததைக் கண்ட தாய்ப் பறவை அழுதுகொண்டே கடற்கரையில் அமர்ந்து தன்னுடைய அலகினால் கடல்நீரை கொஞ்சம் கொஞ்சமாக இரைக்க ஆரம்பித்தது.

இறைவனுடைய அருளால் நாம் எப்படியும் முட்டையை அடைந்து விடுவோம் என்ற நம்பிக்கையால் கடல்நீரை இரைத்துக் கொண்டிருந்தது. ''கொஞ்சம் கொஞ்சமாக இப்படி இரைத்துக் கொண்டிருந்தால் கடல் நீரும் வற்றிவிடும். நாமும் நம் முட்டையை எடுத்துச்செல்லலாம்'' என்று மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தது. பெரிய பெரிய அலைகள் வருவதைக் கண்டு அது பயப்படவில்லை. இரவுப்பொழுதைக் கண்டும் அது பயப்படவில்லை. அதனுடைய செயலையும், முயற்சியையும், நம்பிக்கையையும், தாயுள்ளத்தையும் பார்த்து மகிழ்ந்த இறைவன், அந்தப் பறவைக்கு தன்னருளால் அதன் முட்டையை கிடைக்கும்படி செய்தான்.

அதுபோல் மஹாத்மாக்களுக்கு இந்த உலகிலும் வேறு எந்த உலகிலும் செய்ய வேண்டிய, தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களே இல்லை. எங்ஙனம் அந்தப் பறவை நம்பிக்கையாலும், விடாமுயற்சியாலும், கடல் நீரை இரைத்ததோ, நாமும் இறைவனிடமும், மஹாத்மாக்களிடமும் பரிபூரணமான ஶரணாகதி செய்யவேண்டும். ஆரம்பத்தில் அது முடியாமல் போனாலும் மீண்டும் மீண்டும் நம்பிக்கையுடன் முயற்சி செய்து வந்தால் இறையருளால் எப்படியாவது நிச்சயம் முழுமையான ஶரணாகதி செய்து விடுவோம் என்பதையே இந்தக் கதை தெரிவிக்கிறது.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷனைகளிலிருந்து - 53

**சகலமும் விழுங்கும் கதிரொளியினமன**
**சலசமலர்த்திடு அருணாசலா** (தொடர்ச்சி)

‘உலகில் காரியங்கள் நடைபெறுவதற்கும், நமக்கு சுக, துக்கங்கள் ஏற்படுவதற்கும் ப்ராரப்தமே காரணம். ஒருவரின் ஶரீரத்துக்குதான் ப்ராரப்தம் உண்டு. அதிலும் அந்த ஶரீரத்தில், ஆத்ம சைதன்யம் குடிகொண்டு இருந்தால்தான் உண்டு. இல்லாவிடில், உயிரற்ற பிணத்துக்கு ப்ராரப்தம் உண்டென்று ஆகிவிடும். ஆக, ஆத்ம சைதன்யமானது இல்லாவிடில் காரியங்களே நடைபெறா.

ஒவ்வொருவருடைய ஜாதகத்திலும், அவரவர்களின் பல்வேறு விஷயங்களைப் பற்றி இருக்கும். இன்னாருடைய ஜாதகத்தில் அவர் இன்ன தேதியில் வேலையில் சேர்வார். அவருக்கு ஆயுட்காலம் என்பது இவ்வளவுதான். அவருக்கு கல்வியானது ஒரு குறிப்பிட்ட அளவு வரைதான் உண்டு. அவர் குடும்பத்தோடு சேர்ந்து இருப்பாரா அல்லது பிரிந்து இருப்பாரா என்று எல்லாம் இருக்கும். இவை அனைத்தும் ஶரீர ஸம்பந்தமான விஷயங்களே. ஆனால் அவர் தியானம் செய்வாரா, மோக்ஷம் செல்வாரா, மோக்ஷம் செல்ல அவருக்கு ஆசை இருக்குமா, அவர் பக்திமானாகவும், வைராக்யசாலியாகவும் இருப்பாரா என்று எல்லாம் சொல்வது என்பது இயலாது. ஏனெனில் அதைப் பற்றி ஜாதகம் கூறாது. மேலும் பரமார்த்திகமான விஷயங்கள் ப்ராரப்தத்தின் வசத்தில் இல்லை. ஆக, ஒரு ஸாதாரண ஜீவனுக்கு பரமார்த்திக விஷயங்களில் ஸ்வதந்திரம் உண்டு. தியானம் செய்வதோ, பக்தி செய்வதோ, வேதாந்தவிசாரம் செய்வதோ அவரவர்களுடைய விருப்பத்தை பொறுத்தது. இவற்றை செய்யாமலும் இருக்கலாம். இந்த ஸ்வதந்திரம் ஶரீர ஸம்பந்தமான விஷயங்களுக்கு இல்லை.

மேற்கூறியது ஸாமானியர்களின் விஷயத்தில்தான் பொருந்தும். அவதார புருஷர்களுக்கு மேற்கூறியவை பொருந்தா. ஒரு அவதார புருஷரின் ஜாதகக் குறிப்பைப் பார்த்தால், அவருடைய ஆன்மீக வாழ்க்கையைப் பற்றி கூட மிகத் தெளிவாக கூறக் கூடும். இந்த மஹாத்மா இவ்வளவு வருடங்கள் கடுமையாகத் தவம் செய்தார். இது, அவருடைய ஜாதகத்திலேயே இருக்கிறது என்று சொல்லமுடியும். இதையே ஒரு ப்ரமாணமாக வைத்துக் கொண்டு ஸாமானியர்களின் விஷயத்தில் இது போன்ற குறிப்புகள் காணக்கிடைக்க வில்லையே, ஆதலின்

அவர்களுக்கு தவமோ, தியானமோ, கீர்த்தனமோ செய்யும் வாய்ப்பு கிடையாது என்று கூறுவது சரியல்ல.

ஒரு அவதார புருஷரையும், ஸாமானிய மனிதரையும் ஒப்பிடுவது ஒரு பெரிய பருந்தையும் ஒரு காக்கையையும் ஸம்பந்தப்படுத்திப் பார்ப்பது போல் ஆகும். இரண்டும் பறவைகளே. அருகில் இரண்டும் இருந்தால் ஏதும் பெரிய வித்தியாசம் இல்லாதது போல் தோன்றும். உருவத்தில் வேண்டுமானால் பருந்து பெரியதாக இருக்கலாம் என்று தோன்றும். ஆனால் இரண்டும் பறக்க ஆரம்பித்து விட்டால், பருந்து மிக உயரே சென்று விடும். காக்கையானது எக்கி, எக்கி பறந்து போனாலும் கூட, பருந்தின் அருகே கூட போகமுடியாது. அதுபோல், அவதார புருஷர்களை, பார்த்தால் ஸாமானியர்களைப் போன்றே உடை உடுத்தி, உண்டு, பேசி, உறங்கி வாழ்தல் போல் தோன்றும். ஆனால் அவர்களுடைய பக்தியும், ஞானமும், வைராக்யமும் எல்லையற்றதாக இருக்கும். அவர்களுடைய வாழ்க்கையில் நடக்கும் ஸம்பவங்களும் மிகப் பெரிய எடுத்துக்காட்டாக அமைந்துவிடுகின்றன.

அவதார புருஷர்களின் வாழ்க்கை, கர்மாவை (ப்ராரப்தம்) அனுசரித்தது அல்ல. அவர்களுக்கு ப்ராரப்தம் கிடையாது. அவர்கள் லோக உபகாரம் செய்வதற்காகவே அவதரிக்கிறார்கள். இதையே கிருஷ்ணன் கீதையில் அர்ஜுனனிடம், ''உனது பிறப்பு போல், எனது பிறப்பு இல்லை. நான் இதுவரை எவ்வளவு பிறவிகள் எடுத்தேன் என்று தெரியும். இனி எவ்வளவு எடுப்பேன் என்றும் தெரியும். ஆனால் நீ அப்படி அல்ல'' என்கிறார். ஆனால், ஸாமானியர்களுக்கு உயர்ந்த ஆன்மீக வாழ்க்கை வாழ தடை என்பது இல்லை. அனைவரையும் மோக்ஷம் செல்லத்தான் பகவான் படைத்து உள்ளான். மோக்ஷம் செல்ல ஆசைப்படுவதிலும், முயற்சிப்பதிலும், பக்தி செய்வதிலும் ஒரு ஜீவனுக்கு ஸ்வதந்திரம் உண்டு. மோக்ஷம் செல்ல ஒரு ஜீவன்தான் ப்ரயத்தனப்படவேண்டும்.

இரு நண்பர்கள் சேர்ந்து வியாபாரம் செய்ய இசைந்தனர். அவர்கள் செய்த தொழிலில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. ஒருவனால் அந்த நஷ்டத்தை கொஞ்சம் கூட தாங்க முடியவில்லை. நஷ்டத்தை பெரிய அவமானமாக எண்ண, எண்ண அவனுக்கு தூக்கு மாட்டிக் கொள்ளலாமா என தோன்றுகிறது. மற்றொருவனோ விவேகி. தைரியமாக, நஷ்டத்தை ஸகஜமாக எடுத்துக் கொண்டான். நஷ்டம் அவனை பாதிக்கவே இல்லை. நஷ்டம் இருவருக்கும்தான் நேர்ந்தது. இருவருக்கும் பொது, ஸமபங்கு கூட. இருப்பினும் இருவருடைய பக்குவமும் வேறுபட்டிருந்தது. இங்கு நஷ்டமே ப்ராரப்தம். ப்ராரப்தத்தை தவிர்க்கமுடியாது. ஆனால், அதை எடுத்துக் கொள்ளும் பக்குவம்

அவரவர் கையில்தான் உள்ளது.

சூரியன் இல்லாவிட்டால் உலகில் காரியங்கள் நடைபெறா. அப்படி எனில் உலகில் நடக்கும் அனைத்துக் காரியங்களுக்கும் சூரியன்தான் காரணகர்த்தா என சொல்ல முடியுமா என்ன? அவர் அனைத்துக்கும் ஸாக்ஷி மட்டும்தான். அது போல், ஶரீரத்தில் நடைபெறும் காரியங்களுக்கு ஆத்மா ஸாக்ஷி மட்டும்தான். ஆனால் அது தூண்டுவதில்லை. அது இல்லாவிட்டால் ஶரீர சேஷ்டைகளும் நடைபெறாது.

தூரத்தில் ஒரு கயிறு இருக்கிறது. அதைப் பார்க்க பாம்பு போல் தோன்றுகிறது. பாம்பு என்று தோணுகிறவரையில் அது கயிறுதான் என்ற திருஷ்டி வராது. ஆனால் கயிறுதான் அது என்று தீர்மானமாகி விட்டால், பாம்பு என்கிற திருஷ்டி முற்றிலும் மறைந்து விடும். கயிறுதான் பாம்பாய் தோன்றியது. இரண்டும் ஒரே ஸமயத்தில் தோன்றா. அது போல் 'ஸகலமும் விழுங்கும்' - ஞான விழிப்பு ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால், உலகம் அவனுக்கு பொய்யாகிவிடும்.

**சகலமும் விழுங்கும் கதிரொளியினமன**
**சலசமலர்த்திடு அருணாசலா**

'ஜலஜம்' என்றால் 'தாமரை' என்று அர்த்தம். 'ஜலஜம்' என்பது தமிழில் சலசம் ஆயிற்று. மனசலசம் என்பது அகத்தாமரையை குறிக்கிறது. எவ்வாறு சூரியனின் ஸன்னதி மாத்திரத்தில் தாமரை மலருகிறதோ, அதுபோல் அருணாசலா, உன்னுடைய திவ்ய சூரியன் போன்ற தேஜஸினால் என்னை மலர்த்திவிடு. எனக்கு அப்படி ஒரு அனுக்ரஹம் செய் என்கிறார்.

ஆத்மா, ஸர்வ வ்யாபி. ஆத்மா, ஸர்வ சக்தி வாய்ந்ததும் கூட. அப்படிப்பட்ட ஆத்மா, ஏன் தன்னைத்தானே காண்பித்துக் கொள்ளக் கூடாது என்றால், அதற்கு தான் மாட்டிக்கொண்டு இருக்கிறோம் என்னும் எண்ணம் இல்லை. ஆத்மா தன்னை பந்தப்பட்டு விட்டதாக எண்ணவில்லை. ஆகையால், தன்னைக் காண்பித்துக் கொள்ளவேண்டிய அவசியம் அதற்கு இல்லை. பந்தப்பட்டு விட்டதாக நினைப்பது நாம்தான். ஆக, நாம்தான் நமது விடுதலைக்கு பாடுபடவேண்டும். இது எப்படி என்றால், ஒரு தாயாருக்கு ஒரு குழந்தை இருக்கிறது. குழந்தை தாயின் அரவணைப்பில் இரவு தூங்கிக்கொண்டு இருக்கிறது. தாயாருக்கு குழந்தை தனது அரவணைப்பில்தான் உறங்கிக்கொண்டு இருக்கிறது என்று நன்கு தெரியும். குழந்தை இரவில் திடீரென்று எழுந்து 'அம்மா எங்கே' என்று அழுதால், தாய் உடன், தான் அங்கேயே இருப்பதை குழந்தைக்குக் காட்டி, குழந்தையை தூங்கப் பண்ணுகிறாள்.

குழந்தைக்குத்தான், தாய் அருகில் இல்லை என்ற பிரமை ஏற்பட்டது. அதனால்தான் அது அழுதது. தாயாருக்கோ அவ்வாறு ஒரு பிரமை இல்லை. ஏனெனில் அவள் பாதுகாப்பில் குழந்தை அங்கு இருப்பதுதான் அவளுக்கு நன்றாகத் தெரியுமே? அதுபோல், ஆத்மா ஸதா ஹ்ருதயத்திற்குள் இருந்தபோதிலும், தன்னைக் காட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் அதற்கு இல்லை. நமக்குதான் ஆத்மாவைத் தெரியாது. நாம் குழந்தையைப் போல பிரமையில் இருக்கிறோம். நாம்தான் முயன்று, பாடுபட்டு ஆத்மாவை தெரிந்து கொள்ள வேணும்.

ஸ்வப்னே ஜாக்ரதி வா ய ஏஷ புருஷோ மாயா பரிப்ராமித: என்று ஆச்சார்யாள் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தில் சொல்வது போல், ஒரு மனிதன் உறங்கும்பொழுது ஒரு அழகான கனவு கண்டான். தனது கனவில் பெரிய மாட, மாளிகைகள், கூட கோபுரங்கள் அனைத்தும் கண்டான். அவனுக்கு கனவு கலைந்தவுடன் அவை அனைத்தும் மறைந்து போய் விட்டன. காலையில் விழிப்பு வந்தவுடன், அந்த மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் கனவுதான் என்று அவனுக்கு புரிந்துவிட்டது. அது மாதிரியே, ஞானம் வந்தவுடன் இந்த உலகம் என்பது ஒரு கனவாகப் போய்விடும். ஆக இந்த உலகையே, 'சகலமும் விழுங்கும் கதிரொளியினமன', ஆத்மஞானமானது விழுங்கி விடுகிறது. அத்தகைய உயர்ந்த ஞானம் யாருக்கும் எளிதில் கிடைக்காது. அதுவும் உனது அனுக்ரஹத்தினால்தான் ஏற்படும். உனது அனுக்ரஹத்தினால் எனது அகத்தாமரையை மலரச் செய் என்கிறார் பகவான் ரமணர். (தொடரும்)

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

ஜனவரி 4, 5, 6 தேதிகள்

மும்பை, மாதுங்கா The South Indian Bajan Samaj-ல் நடைபெறும் ப்ரஸ்தானத்ரய பாஷ்ய பாராயண வித்வத் ஸதஸில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

டிசம்பர் 31-ந் தேதி முதல் ஜனவரி 15-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள், மும்பை, The South Indian Bajan Samajல் ''திருப்பாவை'' உபந்யாஸம் செய்கிறார்கள்.

ஜனவரி 16-ந் தேதி ஜனவரி 20-ந் தேதி வரை

மும்பை, ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸமாஜ் (ரிஜிஸ்ட்), கோவில் வளாகம், செட்டா நகர், செம்பூர் சார்பில் ஸ்ரீ ஸ்வாமிகள், 'பக்த விஜயம்' உபந்யாஸம் செய்ய இருக்கிறார்கள்.

# செய்திகள்

நவம்பர் - 29-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள், காணிமடம் சென்று யோகிராம்சுரத்குமார் அவர்களின் ஜயந்தி உத்ஸவங்களில் கலந்து கொண்டார்கள்.

டிசம்பர் 11-ந் தேதி, 12-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள், முன்னிலையில் பெங்களூர், மல்லேஶ்வரம், ஸ்ரீ ஹரிஹரன் அவர்கள் க்ருஹத்தில் ராதா கல்யாணம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள் 12-ந் தேதி மல்லேஶ்வரம் ஆஸ்திக ஸமாஜத்திற்கு விஜயம் செய்தார்கள்.

டிசம்பர் 16-ந் தேதி முதல்

சென்னை ப்ரேமிகபவனத்தில் தனுர்மாத பூஜை நடைபெற்று வருகின்றது.

டிசம்பர் 16-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் மாலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணிவரை அத்யயன உத்ஸவம் நடைபெற்றது.

டிசம்பர் 25-ந் தேதி மாலையில்

ஆண்டாள் கல்யாணமும் அதைத் தொடர்ந்து சாற்று மறையும் நடைபெற்றது.

டிசம்பர் 19-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் வைகுண்ட ஏகாதஶியை முன்னிட்டு பரமபதவாசல் திறக்கப்பட்டது. காலை 4.30 மணிக்கு கருடவாஹனத்தில் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன் திருவீதி புறப்பாடு கண்டருளினார்.

காலையில் நாமகீர்த்தனமும், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு திருமஞ்சனமும், மதியம் நாமகீர்த்தனமும், மாலையில் திருப்பாவை ப்ரவசனமும், இரவு அத்யயன உத்ஸவ, நாலாயிர பாசுர பாராயணமும் இரவு முழுவதும் - மறுநாள் விடியற்காலை வரை திவ்யநாம பஜனையும் நடைபெற்றன.

டிசம்பர் 24-ந் தேதி

சென்னை மயிலாப்பூர், ரமண கேந்த்ரா ட்ரஸ்ட் சார்பில் நடைபெற்ற பகவான் ஸ்ரீ ரமண ஜயந்தி உத்ஸவத்தில் நம் ஸ்வாமிகள் கலந்துகொண்டு ''தேவிகா லோத்ரம்'' பற்றி உரை நிகழ்த்தினார்கள்.

மங்களானி பவந்து

# பண்டைய பாரதத்தின் பெருமை

Courtesy - A German Magazine

1. கடந்த 10,000 வருடங்களுக்கு மேலாக இந்தியா வேறு ஒரு நாட்டின் மீது படையெடுத்ததே இல்லை.
2. இந்தியர்கள்தான் எண்களை கண்டுபிடித்தனர். சைபர் (பூஜ்யம்) என்ற எண்ணை கண்டு பிடித்தவர் ஆர்யபட்டா. இவரும் இந்தியர். எண் கணிதத்தில் புள்ளியை உபயோகப்படுத்த ஆரம்பித்ததும் இந்தியர்கள்தான்.
3. கி.மு. 700-ல் இந்தியாவின் தக்ஷசீலத்தில்தான் முதல் பல்கலைக் கழகம் உலகிலேயே கட்டப்பட்டது. உலகெங்கிருந்தும் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள், அறுபதுக்கும் மேற்பட்ட கல்வித்துறைகளில் பயின்று சென்ற வண்ணமிருந்தனர். நாலந்தாவில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக் கழகம் கி.மு. 4ம் நூற்றாண்டிலேயே கட்டப்பட்டது.
4. ஸமஸ்கிருதம் ஐரோப்பிய மொழிகளனைத்துக்கும் தாய் போன்றது. போர்பஸ் (Forbes) என்ற பத்திரிக்கை ஸமஸ்கிருதம், கணிணி புரோகிராம்களுக்கு (Computer Software) மிகவும் ஏற்றது என்கிறது.
5. ஆயுர்வேதம்தான் உலகின் மிகப் பழமையான மருத்துவம். சரகா என்ற இந்தியர் தான் மருத்துவ உலகின் தந்தையாக கருதப்படுகிறவர். இவர் சுமார் 2500 வருடங்களுக்கு முன் ஆயுர்வேதத்தை தொகுத்தார். ஸமீபகாலமாக, ஆயுர்வேதம் தனக்கு உரிய உயர்ந்த இடத்தை மருத்துவ உலகில் பெற்றுக்கொண்டு வருகிறது.
6. இந்தியாவிலுள்ள வளம்தான் இந்தியாவைக் காண கிறிஸ்டோபர் கொலம்பஸை ஈர்த்தது. 17வது நூற்றாண்டில் ஆங்கிலேயரின் படையெடுப்புக்கு முன் வரை, இந்தியா மிக மிக ஒரு வளம் மிக்க (பணக்கார) நாடாக இருந்திருக்கிறது. இது தற்காலத்தில் காணப்படும் வறுமை மற்றும் வாழ்க்கைத் தரத்தின் பிற்போக்கு இவைகளுக்கு நேர் எதிர்மாறாய் இருந்திருக்கிறது.
7. கடல்வழி செல்லுதல் என்பது 6000 வருடங்களுக்கு முன்னரே, சிந்துசமவெளி நாகரிகத்தில் இடம்பெற்றிருந்தது. ஸமஸ்கிருத வார்த்தைகளான நவகடி, நவ போன்ற பதங்களே ஆங்கில பதங்களான Navigation (நேவிகேஷன்), Navy (நேவி) போன்றவைகளுக்கு மூலம் (root) ஆக இருந்திருக்கிறது.
8. பூமி சூரியனைச் சுற்றி வர ஆகும் நேரம் 365.258756484 நாட்கள். இதைக் கண்டுபிடித்தவர் விண்வெளி ஆய்வாளர் ஸ்மார்ட் என்கின்றனர். இவர் கண்டுபிடிப்பதற்கு முன்னரே இந்தியாவைச் சேர்ந்த பாஸ்கராச்சார்யா எனும் விஞ்ஞானி நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், சொல்லி விட்டார். இன்றைய (Pythagorean Theorem) 'பிதாகொரியன் தியரி' என்பதற்கு வித்திட்டவர் இவரே. இதை இவர் 6-ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய விஞ்ஞானிகளுக்கு வெகுமுன்பே கண்டுபிடித்தார்.

(தொடர்ச்சி - பின் அட்டைப் பக்கம்)

9. கிறிஸ்து பிறக்கு முன் சுமார் 5000 வருடங்களுக்கு முந்தையதாக, வேதகாலத்திலேயே இந்துக்கள் $10^{53}$ என்ற எண்ணையே மிக உயர்ந்த எண்ணாகக் கொண்டிருந்தனர். கிரேக்கர்களும், ரோமானியர்களும் அச்சமயத்தில் $10^{6}$ எனும் எண்ணையே உயர்ந்த எண்ணாகக் கொண்டிருந்தனர். இன்று கூட பத்துக்கு மடங்காக ($10^{12}$ பன்னிரெண்டுவரை உள்ள எண்ணே மிக உயர்ந்ததாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

10. இந்தியாவில் மட்டுமே முற்காலத்தில் வைரங்கள் கிடைத்து வந்தன என்றும், உலகின் வேறு இடங்களுக்கு வைரம் இந்தியாவிலிருந்து தான் சென்று கொண்டிருந்தது என்றும் அமெரிக்க வைர ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது. 1896-ஆம் வருடத்திற்கு பிறகுதான் உலகின் பிற பாகங்களில் வைரம் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது.

11. ‘‘கம்பி இல்லா தொலைதொடர்பு முறையை (ரேடியோ) கண்டுபிடித்தது மார்கோனி அல்ல, இந்தியாவை சேர்ந்த புரொபஸர் ஜகதீஷ் சந்திர போஸே’’ என்று அமெரிக்காவை தலைமையாகக்கொண்டு இயங்கும் IEEE ஸ்தாபனம் கூறுகிறது. இது அறிவியல் வல்லுநர்களிடையே வெகுகாலமாய் விவாதிக்கப்பட்டு வரும் விஷயம்.

12. நீரைத் தேக்குவதற்காக அணை, ஏரி கட்டுவது அவைகளை விவசாயம் போன்றவைகளுக்கு உபயோகப்படுத்துவது என்பது கூட இந்தியாவைப் பொறுத்தவரை மிக மிக பழமையான விஷயம். உலகில் முதன்முதலாக கட்டப்பட்ட அணை சௌராஷ்டிராவில்தான் கட்டப்பட்டது என கருதப்படுகிறது.

13. இந்தியர்கள்தான் சதுரங்க விளையாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்தினர்.

14. ஶுஶ்ருதா (Shushruta) என்பவரே அறுவை சிகிச்சையின் தந்தையாவார். 2600 வருடங்களுக்கு முன் அவரும் அவர் காலத்தில் வாழ்ந்த மருத்துவ அறிஞர்களும் சேர்ந்து பிள்ளைப்பேறு (Cesarean), கண்நோய் (Cataract) செயற்கை அங்கங்கள் (Artificial Limbs), எலும்பு முறிவுகள் (fracture), சிறுநீர்பை கற்கள் (Urinary Stones) போன்றவைகளுக்காகவும், மேலும் பிளாஸ்டிக் ஸர்ஜரி மற்றும் மூளை ஸம்பந்தமான அறுவை சிகிச்சைகளும் மிகவும் நேர்த்தியாகவும், திறம்படவும் செய்து வந்துள்ளனர். அக்காலத்தில் இன்றைய விஞ்ஞானம் இவ்வளவு தூரம் வளரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியர்கள் இந்த அளவிற்கு விஞ்ஞானத்தில் அக்காலத்திலேயே முன்னேறி இருந்தனர்.

    மயக்கமருந்து உபயோகிப்பது பண்டைய இந்தியாவில் உபயோகத்திலிருந்து வந்துள்ளது. 125-க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை ஸம்பந்தமான கருவிகள் உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இந்தியர்களின் பழங்கால மருத்துவ நூல்களிலும், குறிப்புகளிலும் கூட உடற்கூறு, பல்வேறு நோய்களின் மூலம், அவைகளின் காரணம், மரபுவழித் தொடர்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி போன்றவை குறித்து பல அரிய தகவல்கள் உள்ளன.

15. பழங்காலத்தில், 5000 வருடங்களுக்கு முன், அநேக நாட்டு மக்களுக்கு நாகரிகம் என்பதே இல்லை. அவர்கள் ஏறக்குறைய காட்டுவாசிகளாகவே இருந்தனர் ஆனால் 5000 வருடங்களுக்கு முன் கூட இந்தியர்கள் சிந்து சமவெளியில் இந்தியர்கள் ஹரப்பா கலாச்சாரத்தோடு இருந்து வந்துள்ளனர்.

(தொடர்ச்சி - 18-ம் பக்கம்)

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/Chief PMG - 3/99
WPP No. TN/Chief PMG - 4/99

வேணு : 5 | ஜனவரி 2000 | கானம் : 6





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar